1. அறிவிப்புகள்.

(ஏ) (i) திரைப்படங்கள் தொடர்பான விளம்பரங்களைக் கட்டாயமாகத் தணிக்கை செய்தல் சட்ட முன் வடிவு, 1987 (அ.இ.)

(ii) தமிழ்நாடு விளம்பரம் பொருள்களின் கட்டாயத் தணிக்கைச் சட்டமுன் வடிவு, 1987 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறி விப்பு :

தமிழ்நாடு 1987ஆம் ஆண்டு திரைப்படங்கள் தொடர்பான விளம்பரங்களைக் கட்டாயமாகத் தணிக்கை செய்தல் சட்ட முன் வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசை வைத் தெரிவித்துள்ளார்.

1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு விளம்பரப் பொருள்களின் கட்டாயத் தணிக்கைச் சட்டமுன் வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

இரண்டு சட்டமுன்வடிவுகளைப் பற்றியும் சேர்த்தே பேசி விடலாம். ஆனால் தனித்தனியாக ஓட்டுக்கு விடலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

2. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(ஓ) திரைப்படங்கள் தொடர்பான விளம்பரங்களைக் கட்டாயமாகத் தணிக்கை செய்தல் சட்ட முன் வடிவு, 1987.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு திரைப்படங்கள் தொடர் பான விளம்பரங்களைக் கட்டாயமாகத் தணிக்கை செய்தல் சட்ட முன் வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.''

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு திரைப்படங்கள் தொடர்பான விளம்பரங்களைக் கட்டாயமாகத் தணிக்கை செய்தல் சட்டமுன் வடிவு, மற்றும் 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு விளம்பரப் பொருள்களின் கட் டாயத் தணிக்கைச் சட்டமுன்வடிவு ஆகிய இந்த இரண்டு சட்ட

---

*1987 ஆம் ஆண்டு மே திங்கள் 8 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.